DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.**NO.54/2025
Prosecution Witness P.W.24

| | |
|---|---|
| Name: **திரு.சுல்தான் பாட்ஷா** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

2ம் எதிரி ஆஜரில்லை, அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்
நாள்: 04.08.2026
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம், உச்சிப்புளி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.09.2024ம் தேதியன்று அதிகாலை 01.00 மணியளவில் நான் சின்னமனூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது சின்னமனூர் காவல் நிலைய குற்ற எண்.349/2024, பிரிவு 103(1) BNS வழக்கின் சம்பவயிடத்தில் கடந்த 04.09.2024ம் தேதியன்று இரவு 09.30 மணியளவில் சந்தேகத்திற்கு இடமாக இரண்டு ஆண்களும், ஒரு பெண்ணும் TN 78 E 5801 பதிவெண் கொண்ட Scooty இருசக்கர வாகனத்துடன் நின்று கொண்டிருந்ததாகவும், அதில் ஒரு ஆண் கொலை செய்யப்பட்டு இறந்து கிடப்பதாகவும், இறந்தவர் பெயர், விலாசம் தெரியவில்லை என்றும், அந்த வாகனத்தை ஆய்வு செய்து கண்டுபிடித்தால் கொலைசெய்யப்பட்டவர் யார் என்றும், கொலை செய்தவர் யாரென்றும் கண்டுபிடிக்கமுடியும், அதனால் வாகனத்தை ஆய்வு செய்யுமாறு காவல் ஆய்வாளர் என்னிடம் கூறியதை அடுத்து நான் மேற்படி வாகனத்தை ஆய்வு செய்தபோது அந்த வாகனமானது கார்த்திக், த/பெ.முத்துக்கிருஷ்ணன், பெரியார் நகர், மூலனூர், திருப்பூர் என்ற முகவரி என்றும், தொலைபேசி எண்.8248601537 என்றும் தெரியவந்தது.

2. நான் உடனே காவலர்களுடன் திருப்பூர் சென்று கார்த்திக் என்ற நபரை சந்தித்து மேற்படி வாகனம் குறித்து விசாரித்தபோது, அந்த வாகனம் தன்னுடையது தான் என்றும், அந்த வாகனத்தை தன்னுடைய நண்பரான சிவக்குமார் என்பவர் மூலம் வினித்குமார் என்ற நபரிடம் ரூ.20 ஆயிரத்திற்கு அடமானமாக வைத்திருப்பதாகவும் கூறினார். நான் உடனே கார்த்திக்–யை அழைத்துக் கொண்டு சிவக்குமாரை சந்தித்து வாகனம் குறித்து கேட்டபோது அந்த வாகனமானது வினித்குமாரிடம் இருப்பதாக கூறினார்.

3. உடனே நான் சிவக்குமாரையும், கார்த்தியையும் அழைத்துக்கொண்டு வினித்குமாரை சென்று சந்தித்தேன், அவரை சந்தித்து மேற்படி வாகனத்தை பற்றி விசாரித்த போது அந்த வாகனமானது தன்னுடன் வேலை செய்த ராஜபிரபு என்பவர் அவருடன் ஒரு வாரகாலமாக இருந்த பூங்கொடி என்பவருடன் வாகனத்தை எடுத்துக் கொண்டு அவரது சொந்த ஊருக்கு சென்றிருப்பதாக கூறினார். மேலும் அவர் என்னிடம் ஏன் அந்த வாகனத்தை பற்றி கேட்கிறீர்கள், ஏதும் சிக்கலா என்று விசாரித்தார், அதற்கு நான் அந்த வாகனமானது கடந்த 04.09.2024ம் தேதியன்று இரவு சின்னமனூர்–சங்கராபுரம் செல்லும் சாலையில் சந்தேகத்திற்கிடமான சிலருடன் இருந்ததாகவும், அந்த இடத்தில் தற்போது ஒரு நபர் கொலைசெய்யப்பட்டு இறந்து கிடப்பதாகவும், அதனால் வாகனத்தை பற்றி விசாரித்ததாகவும் கூறினேன்.

4. அந்த நேரத்தில் வினித்குமாருடைய கைபேசி எண்ணிற்கு இன்ஸ்டாகிராம் மூலம் அலைபேசி அழைப்பு வந்தது. அப்போது வினித்குமார் என்னிடம் ராஜபிரபு தான் அலைபேசி மூலம் அழைப்பதாக என்னிடம் கூறினார். நான் உடனே சுதாரித்துக்கொண்டு வினித்குமாரிடம் அருகில் போலிசார் இருப்பதாக ராஜபிரபுவிடம் காட்டிக் கொள்ள வேண்டாமென்றும், அலைபேசியை அட்டன்ட் செய்து ஸ்பீக்கர் போட்டு பேசுமாறும் கூறினேன். அவரும் அவ்வாறே செய்தார். நான் என்னுடைய கைபேசியில் அதனை வீடியோ ரெகார்ட் செய்தேன், மறுமுனையில் பேசிய ராஜபிரபு, வினித்குமாரிடம் நான் ஒரு பெண்ணிடம் பேசுவேன் அல்லவா, அந்த பெண்ணின் கணவர் தன்னுடன் சண்டையிட்டதாகவும், நானும் அவனை அடித்து கரட்டோரம் அழைத்துக் கொண்டு சென்று கத்தியால் குத்தி கொலை செய்துவிட்டதாகவும், அந்த நேரத்தில் ஓர் போலிசார் அங்கு வந்ததாகவும், வாகனத்தை புகைப்படம் எடுத்தாரா

என்று தெரியவில்லை என்றும், தான் அந்த வாகனத்தை சைடு லாக்–ஐ உடைத்து பாதுகாப்பாக வைத்திருப்பதாக கூறினார்.

5. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம் தான் அந்த வாகனம், நான் இந்த தகவலை காவல் ஆய்வாளருக்கு உடனடியாக தெரிவித்தேன். காவல் ஆய்வாளர் அதன் அடிப்படையில் ராஜபிரபுவை கைது செய்து விசாரணை செய்ததில் ராஜபிரபும், பூங்கொடியும், பூங்கொடியின் தந்தை முருகனும், ராஜபிரபுவின் நண்பர்களான சதீஷ்குமாரும், சுருளிராஜாவும், தீபக்ராஜாவும் சேர்ந்து சதித்திட்டம் தீட்டி பூங்கொடியின் கணவரான சென்றாயனை கத்தியால் குத்தி கொலை செய்து இரத்தம்பட்ட துணிமணிகளை ராஜபிரபுவும், பூங்கொடியும் அந்த துணிகளை எறித்துவிட்டதாக தெரியவந்தது.

6. அதன்பின்பு காவல் ஆய்வாளர் என்னிடம் கேட்டுக்கொண்டதன் பேரில் ராஜபிரபுவும், வினித்குமாரும் இன்ஸ்டாகிராம் காலில் பேசியதை என்னுடைய கைபேசியில் வீடியோ ரெகார்ட் செய்ததை ஒரு விரலியில் (பென்டிரைவ்) பதிவிறக்கம் செய்து 63(4)(c) சான்றிதழையும், Hash Value சான்றிதழையும் அளித்தேன். விரலி (பென்டிரைவ்) அ.சா.ஆ.46. BSA ன் படி 63(4)(c) சான்றிதழ் இணைக்கப்பட்டது) Hash Value சான்றிதழ் அ.சா.ஆ.47. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1. நான் அன்றைய தேதியில் பணிபுரிந்ததற்கான ஆவணத்தை ஆய்வாளர் என்னை விசாரணை செய்யும்போது ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைக்கவில்லை, பொதுநாட்குறிப்பில் நான் அன்றைய தினம் பணிபுரிந்தது பற்றி குறிப்பிடப்பட்டது. இருசக்கர வாகனம் சம்பந்தமான விபரங்களை பற்றி யாரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன் என்ற விபரத்தை ஆய்வாளர் விசாரணையின் போது நான் சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் காவல் நிலையத்திலிருந்த இ–சலான் மூலம் அதுபற்றி அறிந்து கொண்டேன், இந்த தகவலையும் நான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. அந்த இருசக்கர வாகனத்தின் நிறம், அந்த கம்பெனியின் பெயர் பற்றி ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு

மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு சென்று விசாரிக்கும்போது அந்த மாவட்டத்தின் ஆய்வாளரிடம் ஒப்புதல் கடிதம் வாங்கவேண்டுமென்றால், அவரிடம் தகவல் தெரிவித்தால் மட்டும் போதும், ஆனால் நான் இந்த வழக்கில் அவ்வாறு தகவல் தெரிவிக்கவில்லை. நான் இதுபற்றி எனது ஆய்வாளர் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் சரிதான். 63(4)(c) BSA ன் படி சான்றிதழ் கொடுக்கும் அளவிற்கு நான் தனித்துவம் பெற்றவரல்ல என்றால் சரியல்ல.

3. எனது கைபேசியில் எந்த நேரத்தில் நான் வீடியோ எடுத்தேன் என்பது பற்றி எனது ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எந்த கைபேசியில் வீடியோ எடுத்தேன் என்று எனது ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ராஜபிரபு மற்றும் வினித்குமார் ஆகியோரின் இன்ஸ்டா ஐ.டி.பற்றி நான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எந்தெந்த காவலர்களை அழைத்துச் சென்றேன் என்றும், எத்தனை காவலர்களை அழைத்துச் சென்றேன் என்றும் நான் எனது ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. இன்ஸ்டாவில் பேசியது சம்பந்தமாக அத்தாட்சி ஏதும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய கைபேசியில் நான் வீடியோ பதிவு செய்தததில் நான் அத்தாட்சி ஏதும் தயார் செய்யவில்லை. இந்த விசாரணை சம்பந்தமாக என்னுடன் ஆய்வாளர் உடன் வரவில்லை என்றால் சரிதான். வினித்குமாரின் கைபேசி எண் என்ன என்றும், அதன் நெட்வொர்க் என்ன என்றும் நான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடன் வந்த காவலர்கள் நான் எனது கைபேசியில் வீடியோ எடுத்ததை பார்த்தனர் என்றால் சரிதான்.

5. என்னுடைய கைபேசியை நான் ஆய்வாளர் விசாரணையில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய கைபேசி அன்றைய தேதியிலிருந்து சான்றிதழ் ஒப்படைக்கும் வரை எனது கைபேசியானது பழுதாகவில்லை என்ற சான்றிதழை நான் ஆய்வாளர் வசம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நானாக எடுத்து ஜோடிக்கப்பட்ட காட்சி என்றும், அதனால் தான் நான் ஆய்வாளர் வசம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. வினித்குமாரின்

கைபேசி எண்ணை யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்ற விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. கார்த்திக் என்ற நபரை நான் எத்தனை மணிக்கு சந்தித்தேன், எந்த முகவரியில் சந்தித்தேன், எவ்வளவு நேரம் பேசினேன் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால், கார்த்திக் முகவரியை ஆய்வாளர் விசாரணையில் தெரிவித்துள்ளேன். வினித்குமார் மற்றும் சிவக்குமார் ஆகியோரை நான் எங்கு வைத்து விசாரித்தேன் என்றும், அவர்களின் முகவரியை நான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. எனக்கு வினித்குமார் மற்றும் சிவக்குமாரின் முகவரிகள் தெரியாது. கார்த்திக் என்பவர் சிவக்குமார் தங்கியிருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றார், சிவக்குமார் மற்றும் கார்த்திக் ஆகியோர் வினித்குமார் தங்கியிருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றனர். நான் முறையாக விசாரணை செய்திருந்தால் முகவரியை குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றும், அதேபோல் ராஜபிரபு மற்றும் பூங்கொடி முகவரியையும் சரியாக குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.

8. இன்ஸ்டாகிராமில் ராஜபிரபு எவ்வளவு நேரம் பேசினார் என்று ஆய்வாளர் விசாரணையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆனால் காலை நேரத்தில் சுமார் 5 நிமிடங்கள் பேசியிருப்பார். நான் 63(4)(c) BSA ன் படி சான்றிதழ் தயார் செய்யவில்லை என்றும், யாரோ தயார் செய்த சான்றிதழின் நான் கையொப்பமிட்டு வழக்கிற்காக பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது கைபேசியின் மூலம் விடியோ எடுத்திருந்தால் GPS Location தெரிந்திருக்கும் என்றால் சரிதான்.

9. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த பென்டிரைவ் எங்கு வாங்கப்பட்டதென்ற விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த பென்டிரைவ்-ல் எத்தனை GB இருந்ததென்று தெரியாதென்றால் 8 GB பென்டிரைவ். அந்த பென்டிரைவ் Sandisk. நான் பென்டிரைவ் கொடுக்கவில்லை என்றும், காவல் நிலையத்தில் அது தயாரிக்கப்பட்டதென்றால் சரியல்ல. நான் என்னுடைய வாகனத்தில் சென்றேன்,. ஒரு வழக்கு சம்பந்தமாக விசாரிக்க வேண்டுமென்றால் அரசாங்க வாகனத்தில் தான் செல்லமுடியுமென்றும், சொந்த வாகனத்தில்

செல்லமுடியாதென்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றும், நான் ஜோடிக்கப்பட்ட சாட்சி என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

A. SARAVANAKUMAR

Digitally signed by A. SARAVANAKUMAR
Date: 2026.08.04 17:42:36 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.